**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**

**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**

**<u>மோ.வா.வி.கோ.மனு எண். 123 /2017</u>**

பெயர் - திரு.மாதவன் ம.சா.1

த/பெ -

கிராமம் -

தாலுகா -

தொழில் -

ஜாதி -

மதம் -

வயது -

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2023 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 20-ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண உறுதி கூற்றாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் எனது அறிவுரையின் பேரில் அது தயார் செய்யப்பட்டது.

1. பழவூர் காவல் நிலைய குற்ற எண். 341/2014 முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா.ஆ.1.**

2. 23.03.2015 - வழக்கு தாக்கல் செய்வதற்கு வழங்கப்பட்ட அங்கீகார கடிதம் நகல் **ம.சா.ஆ-2.**

3. விபத்துவாகனத்தின் புகைப்படம் **ம.சா.ஆ.3**.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் கன்னியாகுமரி மாவட்டம் செண்பகராமன்புதூர் மின் தொடரமைப்பு கழகத்தில் இளநிலை பொறியாளராக இருக்கிறேன். இந்த நீதிமன்றத்தில் வழக்கு சம்பந்தமாகா சாட்சியம் அளிக்க எனது உயர் அதிகாரியால் அங்கீகார கடிதம் வழங்கப்பட்டதா என்றால்

A BARSAD BEGUM Digitally signed by A BARSAD BEGUM Date: 2023.10.20 18:21:17 +0530

இல்லை. விபதது சமயத்தில் செண்பகராமன்புதூர் மின் தொடரமைப்பு கழகத்தில் நான் இளநிலை பொறியாளராக இருந்தேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. 1ம் எதிர்மனுதார் ஓட்டுநர் மீது பதியப்பட்ட குற்ற வழக்கு நிலை எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து காரணமாக 2 மணி நேரம் மின் கடத்தி போகும் மின் இணைப்பு கோபுரத்தில் மின் துண்டிப்பு இருந்ததை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மின் இணைப்பு கோபுரத்தை சரிசெய்வதற்கு மின்சார ஊழியர்கள் வேலை பார்த்தார்கள் என்றால இல்லை ஒப்பந்தக்காரரர்கள் வேலை பார்த்தார்கள். அவ்வாறு ஒப்பந்தம் ஏற்பட்டது சம்பந்தமகா ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேதம் அடைந்த கோபுரத்தை மறுசீரமைப்பு செய்ய எவ்வளவு செலவுஆகும் என்பதை காட்டும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கோபுரத்தை சரிசெய்ய 8,48,540/- ரூபாய் செலவு ஆனதை காட்டும் அறிக்கை உபகரணங்கள் வழங்கிய ரசீது உள்ளிட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேத மதிப்பு யாரால் செய்யப்பட்டது என்றால் நாகர்கோவில் டவர்லைன் கன்ஸ்டிரக்சன் மதிப்பு செய்து கொடுத்தார்கள். அதிக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக எங்கள் மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க அதிக தொகை குறிப்பிட்டு நாகர்கோவில் டவர்லைன் கன்ஸ்டிரக்சன் சான்று வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. சேதம் அடைந்தமின் கோபுரத்தை சரிசெய்வதற்கு எத்தனை நாட்கள், எத்தனை நபர்கள், வேலை பார்த்து சேதம் சரிசெய்யப்பட்டது என்று ஆவணம் வழி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தமிழ்நாடு மின்சார துறையில் இளநிலை பொறியாளராக இருப்பதால் எனது மேல் அதிகாரி உத்தரவின் பேரில் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. டவர் எந்த வருடம் நிறுப்பட்டது அதன் கால அளவு, நிலைப்பாடடு தன்மை ஆகியவற்றை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நிறுவனத்திற்கு அதிக இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதால் மிகை படுத்தி சாட்சியம் அளிககிறேன என்றால் சரியல்ல விபத்திறகு 1ம் எதிர்மனுதாரர்ர எந்த வகையிலும் காரணம அல்ல என்பதால் 3 ம் எதிர்மனுதார் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை

A BARSAD BEGUM
Digitally signed by A BARSAD BEGUM
Date: 2023.10.20 18:21:22 +0530